மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், சாலைக்கிராமம் வரத்துக்கால், 14 ஏரிகள் பயனடையும் வகையில் ஓர் புனரமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு (ரூ. 5·85 லட்சம்) தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையிலுள்ளது.

Sewage farm at Pallikaranai.

* 114 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether there is any proposal under consideration to construct a new sewage farm at Pallikaranai near Madras ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சென்னை நகர 5ஆம் மண்டலத்தில் விரிவான வடிகால் திட்டத்தின் கீழ் தென் சென்னை சாக்கடைக் கழிவு நீரை அடையாறில் சேகரித்து இரும்புக் குழாய் மூலமாக பள்ளிக்கரணைக்கு எடுத்துச் சென்று அங்குள்ள சாக்கடைக் கழிவுப் பண்ணையை விரிவாக்கி பயன் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக அரசு சென்னை மாநக ராட்சிக்கு பள்ளிக்கரணைச் சதுப்பு நிலத்தில் உள்ள புறம்போக்கு நிலம் 875 ஏக்கர் (நில அளவை எண் 657/3 ஏ2ம் 657/1 பி) கொடுத் துள்ளது. இணைக்கும் பணிகளைத் தவிர குழாய் போடுதல், மையக் கருவிக் குழாய் அமைத்தல் ஆகிய வேலைகள் ஏறத்தாழ முடிவடைந்து விட்டன. மேலும் இறைவை நிலையத்தில் மேலேற்றும் இயந்திரம் நிறுவும் பணி வெகுவாக நடைபெறுகின்றன. பள்ளிக்கரணையிலுள்ள கழிவு நீர் சுத்தப்படுத்தும் திட்டம் சம்பந்தமான எல்லாப் பணிகளும் முழு உருப் பெறும் நிலையிலுள்ளன. இத்திட்டத்தின் கீழ் உள்ள எல்லாப் பணிகளும் முடிப்பதற்குச் சுமார் இரண்டாண்டு காலம் ஆகும். இதர வேலைகள் முடிவடைந்த பின்பே சாக்கடைக் கழிவுப் பண்ணையை விரி வடையச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is any comprehensive scheme with the Government to utilise the sewage water in the entire State because in so many places we find that the sewage water is going to waste?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பல்வேறு மாவட்டங்களில் கேட்கப்பட்டு சில இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கு. காமாட்சி : இப்படி கழிவு நீர் பண்ணைகளை ஏற்படுத்தும் போது குடியிருப்புப் பகுதிகளின் சுகாதாரம் கெடாத அளவிற்கு இந்தப் பண்ணைக்கும் குடியிருப்புப் பகுதிக்கும் உள்ள தூரம், இடைவெளியை நிர்ணயிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: அவைகள் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டுத்தான் வீடுகள் அல்லாத பகுதிகளுக்கு அவைகள் இப்போது திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. திடீரென்று அங்கு வீடுகள் ஏற்பட்டுவிட்டால் அப்போது என்ன செய்வது என்பது பிறகு யோசிக்கப் படும்.

திரு. வா.மை. அப்துல் ஜப்பார் . சாக்கடை வசதியோடு பேரூராட்சி மன்றங்களில் கழிவு நீர்ப் பண்ணைகள் ஏற்படுத்த அரசு அவைகளுக்கு மானியத் தொகை வழங்குமா ? அல்லது மானியத்தொகை வழங்கு வதற்கு சாத்தியம் இல்லை என்றால் கடனாகவாவது கொடுத்து உதவு வதற்கு ஏதாவது அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ.பெ.தர்மலிங்கம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நகராட்சிகளில் இன்றையதினம் கழிவுநீரைப் பயன்படுத்தி புல் மட்டும் பயிரிடுகிறார்கள். மேலும் காய்கறிகள் பயிரிடக்கூடிய வசதியினை அரசு செய்து வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 115 அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

Site for Madras Zoo.

* 116 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether Zoological Experts from Delhi and Hyderabad were invited by the State Government to suggest the place for locating the Zoo of Madras : and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) சென்னையிலுள்ள மிருகக் காட்சி சாலையை, தற்போதுள்ள இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவது பற்றியும், அதற்கு வேறு தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பது பற்றியும், தங்களது யோசனைகளை நல்குவதற்காக டெல்லியிலுள்ள விலங்கியல் பூங்காவின் நெறியாளரும், ஹைதராபாத்திலுள்ள நேரு விலங்கியல் பூங்காவின் நெறியாளரும் தமிழ் நாடு அரசால் அழைக்கப்பட்டனர். அவ்விருவரும் சென்னைக்கு 19-1.1972